# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 3 வியாழன் 19.08.2021 மலர் - 2, இதழ் - 135


## அறநிலையத்துறை சட்ட முரண்




விஜயபாரதம்

கடலூரைச் சேர்ந்த கே.எஸ். குருமூர்த்தி, அர்ஜுனன் இளையராஜா ஆகியோர், சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், 'தமிழக அரசு, மசூதிகள், தேவாலயங்கள் உள்ளிட்டவற்றை முறைப்படுத்த எந்த அக்கறையையும் காட்டுவதில்லை. ஆனால், ஹிந்துக்கள் வழிபடும் கோவில்களை கட்டுப்படுத்த மட்டும், ஹிந்து சமய அறநிலையத் துறை சட்டத்தைக் கொண்டு வந்தது. ஹிந்து கோவில்களை முறைப்படுத்தவும் கட்டுப்படுத்தவும், கொண்டுவரப்பட்ட சட்டம், அதன் நோக்கத்தை மாறி, கோவில்களை அரசு முழுக்கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் கோவில்கள் இருந்தாலும், கோவில் நிலங்கள் ஆக்கிரமிப்பு, நிதி முறைகேடு, ஆகமம் மீறல் உள்ளிட்டவற்றிற்கு தவறாக பயன்படுத்தப்படுகிறது. மதச்சார்பற்ற நாடு என்று சொல்லும்போது, ஹிந்து கோவில்கள் மீது மட்டும் அரசு ஆதிக்கம் செலுத்துவது அரசியல் சட்டத்திற்கு முரணானது. எனவே, ஹிந்து சமய அறநிலையத் துறை சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்' என்று கோரிக்கை வைத்துள்ளனர். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், வழக்கு குறித்த ஆவணங்களை அரசு தரப்புக்கு வழங்க மனுதாரருக்கு அறிவுறுத்தி விசாரணையை ஆறு வாரங்களுக்கு தள்ளி வைத்தனர்.

## யு.பி.ஐ. சாதனை




விஜயபாரதம்

டிஜிட்டல் பண பரிவர்த்தனைக்காக மத்திய அரசு துவக்கிவைத்த யுனிபைட் பேமெண்ட்ஸ் இன்டர்பேஸ் (யு.பி.ஐ) சில்லறை டிஜிட்டல் பண பரிவர்த்தனை முறை மற்ற அனைத்து சில்லரை பண பரிவர்த்தனை முறைகளைவிட மிக வேகமாக வளர்ந்து வருகிறது. பாரதத்தில் நடைபெறும் சில்லறை விற்பனையில் ஏறத்தாழ 10 சதவீதம் யு.பி.ஐ மூலமாகவே தற்போது நடைபெறுகிறது. 2021ல் யு.பி.ஐ மூலம் ரூ. 41 லட்சம் கோடிக்கும் அதிகமாக பரிவர்த்தனைகள் நடந்துள்ளன. கடன் அட்டை, டெபிட் கார்டு பரிவர்த்தனை முறைகளைவிட இது 2.8 மடங்கு அதிகம். கொரோனா 2வது அலை காலகட்டத்தில் யு.பி.ஐ பண பரிவர்த்தனை 4 மடங்கு உயர்ந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விநாயகர் சிலை அனுமதி கிடைக்குமா?



விஜயபாரதம்

அடுத்த மாதம் செப்டம்பர் 10ம் தேதி வரும் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப்பட உள்ளது. வழக்கமாக, தமிழகத்தில் ஆயிரக்கணக்கான பொது இடங்களில் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்படும். கடந்த ஆண்டு, ஹிந்து அமைப்புகள், கொரோனா வழிகாட்டுதல்படி நடப்பதாக கூறி தமிழக அரசிடம் அனுமதி கேட்டனர். ஆனால், முந்தைய அ.தி.மு.க அரசு விநாயகர் சதுர்த்தி விழாவிற்கு கட்டுப்பாடுகள் விதித்தது. பொது இடங்களில் விநாயகர் சிலைகள் வைக்கவும், நீர்நிலைகளில் கரைக்கவும் தடை விதிக்கப்பட்டது. பல விநாயகர் சிலை செய்யும் இடங்கள் சீல் வைக்கப்பட்டன, அங்கு காவல்துறையினர் அராஜகத்திலும் ஈடுபட்டனர். இதனால், விநாயகர் சிலைகள் விற்பனையாகாமல் தேக்கமடைந்தது. தயாரிப்பாளர்களுக்கு இதனால் பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. இந்த ஆண்டும் விநாயகர் சிலைகள் விற்பனை ஆகாமல்போனால், சாவதைத்தவிர வேறு வழி இல்லை என கும்பகோணத்தில் விநாயகர் சிலை தயாரித்து வரும் உத்தரப்பிரதேச மாநிலத்தை சேர்ந்த சிலை வடிவமைப்பாளர் ஒருவர் வேதனை தெரிவித்துள்ளார். தமிழக அரசு, இதனை குறித்து சிந்திக்குமா?

# ராகுலுக்கு நோட்டீஸ்


டெல்லியில் ஒன்பது வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்டதாகக்கூறப்படும் வழக்கில், அந்த சிறுமியின் குடும்பப் புகைப்படத்தை போக்சோ சட்டத்தை மீறி காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டார். அவ்விவகாரம் பெரிய சர்ச்சையை கிளப்பியது. இதனால் ராகுலின் டுவிட்டர் கணக்கு தற்காலிகமாக முடக்கப்பட்டது. இதனை சதிச்செயல் என ராகுல் குற்றம் சாட்டினார். இந்நிலையில், அந்த பதிவை முகநூலிலும் வெளியிட்டார் ராகுல். அதனை ராகுலோ அல்லது முகநூல் நிறுவனமோ நீக்கவில்லை, இதனால் முகநூல் நிறுவன அதிகாரிகளை நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (என்.சி.பி.சி.ஆர்) நோட்டீஸ் அனுப்பியது. அதனையடுத்து அந்தப் பதிவை உடனடியாக நீக்கக்கோரி ஒரு நோட்டீசை முகநூல் நிறுவனம் ராகுலுக்கு அனுப்பியுள்ளது. என்.சி.பி. சி.ஆரில் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு கோரியுள்ளது.

விஜயபாரதம்



# தொலைதொடர்பு நிறுவனத்தில் சோதனை ZTE

டெல்லி அருகில் உள்ள குருகிராமில் அமைந்துள்ள சீன தொலைத்தொடர்பு உபகரண நிறுவனமான விஜயபாரதம் இசட்.டி.இ (ZTE) அலுவலகம், அதன் மூத்த நிர்வாகிகளின் குடியிருப்புகளில் கடந்த ஆகஸ்ட் 17 அன்று வருமான வரித்துறை சோதனை நடத்தியது. இதில், வரி ஏய்ப்பு, போலி செலவுகள், சட்டவிரோத பங்கு கொள்முதல், பண பரிவர்த்தனை, கணக்கு முறைகேடுகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான கோடி மதிப்புள்ள பல விதிமீறல்கள், சட்டவிரோத நடவடிக்கைகள் நடந்தது கண்டறியப்பட்டது. அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, லி ஜியான் ஜூன் மற்றும் பிற உயர் நிர்வாகிகளிடம் இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



விஜயபாரதம்

# எம்.பி. மீது வழக்குப் பதிவு

உத்தரபிரதேசத்தை சேர்ந்த சர்ச்சைக்குரிய சமாஜ்வாதி கட்சி எம்.பி. ஷபிகுர் ரஹ்மான் பார்க், கடந்த ஆகஸ்ட் 16 அன்று ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில், ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதை பாராட்டியுள்ளார். தன் சொந்த நாட்டின் மீதான மோசமான அவர்களின் தாக்குதலை, பாரதத்தின் சுதந்திர போராட்டத்துடன் ஒப்பிட்டுள்ளார். நமது நாடு ஆங்கிலேய ஆட்சியில் இருந்தபோது சுதந்திரத்திற்காக போராடியது. அதேபோல,தற்போது தலிபான்கள் தங்கள் நாட்டை விடுவித்து அதை வழிநடத்த விரும்புகிறார்கள். என கூறியுள்ளார். இதனையடுத்து அவர் மீது தேசத்துரோகம், குழுக்களுக்கிடையே பகைமையை ஊக்குவித்தல், மத உணர்வுகளை மீறுதல் ஆகிய பிரிவுகளின் கீழ் உத்தரபிரதேச காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

# ஹரிகர் ஆகும் அலிகர்




விஜயபாரதம்

உத்தரபிரதேச மாவட்டம் அலிகரில் நடந்த பஞ்சாயத்து வாரியக் கூட்டத்தில், அலிகர் என்ற பெயரை ஹரிகர் என மாற்றுவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஏகமானதாக இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல், தானிபூர் விமானதளத்தை கல்யாண் சிங் விமானத்தளம் எனப் பெயர் மாற்றவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த 2019ல் யோகி ஆதித்யநாத், மாநிலத்தில் தேவையான நகரங்கள், முக்கிய இடங்களின் பெயர்கள் மாற்றப்படும் என்று கூறினார். அதன்படி, 2019 ஜனவரியில் கும்பமேளா நடப்பதற்கு முன்னதாக அலகாபாத் என்பது பிரயாக்ராஜ் என்று பெயர் மாற்றப்பட்டது. முகல் சராய் பகுதி பண்டிட் தீன் தயாள் உபாத்யாய் நகர் என்று பெயர் மாற்றப்பட்டது, பைஸாபாத்தை அயோத்யா என மாறியுள்ளது. அவ்வகையில், தற்போது அலிகர் பெயர் ஹரிகர் என மாற்ற பஞ்சாயத்து சார்பில் மாநில அரசிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது.

# ஆப்கானியர்களுக்கு இ-விசா



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் நிலவும் நெருக்கடியான நிலையைக் கருத்தில் கொண்டு, பாரதத்திற்கு வர விரும்பும் ஆப்கானிஸ்தானியர்களுக்கு விண்ணப்பங்களை விரைவாக பரிசீலிக்க புதிய வகை இ விசா எனப்படும் மின்னணு விசாக்களை உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இதில் மதபேதம் பார்க்கப்படுகிறது என்ற கருத்தை மத்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

# ஐ.எஸ்.ஐ.எஸ். செயற்பாட்டாளர்கள் கைது

கேரளாவின் கண்ணூர் மாவட்டத்தைச் சேர்ந்த, ஷிஃபா ஹாரிஸ், மிஷா சித்திக் ஆகிய இரண்டு பெண்கள், டெலிகிராம், ஹூப், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல்வேறு சமூக ஊடக வலைத்தளங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ் பிரச்சார சேனல்களை இயக்கும் குழுவின் ஒரு பகுதியாக செயல்பட்டு வந்துள்ளனர். ஹாரிஸ் மற்றும் சித்திக் ஆகியோர் இவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதக் குழுவின் செயல்பாடுகளை ஆன்லைனில் ஊக்குவிப்பது, மக்களை மூளைசலவை செய்து பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபடுத்துவது போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர் என்று தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) கண்டறிந்தது. இதனையடுத்து, புதுடில்லியில் இருந்து வந்த என்.ஐ.ஏ விசாரணைக் குழு, நேற்று அதிகாலையில் அவர்கள் இருவரையும் அவர்களது வீட்டில் கைது செய்தது. இருவரும் டெல்லிக்கு கொண்டு செல்லப்படுவார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.





விஜயபாரதம்



# தேவை இஸ்ரேல் உத்தி

பா.ஜ.கவின் தேசிய பொதுச் செயலாளர் சி.டி ரவி, ஏ.என்.ஐக்கு அளித்த ஒரு பேட்டியில், ‘ஒரு பயங்கரவாத அமைப்பு ஒரு நாட்டையே கைப்பற்றியது வேதனை அளிக்கிறது. தலிபான்கள் பாகிஸ்தானால் ஆதரிக்கப்படுகின்றனர். அதற்கு சீனாவின் ஆதரவும் உள்ளது. நம் நாட்டில் ஏராளமான ஊடுருவல்காரர்களும் தேச விரோதிகளும் உள்ளனர். அவர்களை கட்டுப்படுத்துவது ஒரு சவால். அவர்கள் பாரதத்தில் நுழைய சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது. தலிபான்கள் காஷ்மீரில் பயங்கரவாதத்தை தூண்டிவிடும் வாய்ப்பும் காலிஸ்தான் ஆதரவாளர்களை தூண்டிவிடும் வாய்ப்பும் உள்ளது. எனினும் மத்திய அரசு பயங்கரவாதத்திற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும், தேசத்தின் பாதுகாப்பில் 100 சதவீதத்தை உறுதி செய்யும். என்னைப் பொறுத்தவரை, இஸ்ரேலின் பயங்கரவாத எதிர்ப்பு உத்தியை நாம் பின்பற்ற வேண்டும், அப்போது நம் நாடு பாதுகாப்பாக இருக்கும்’ என்று கூறினார்.

# கட்ஜூவின் அடுத்த சர்ச்சை




விஜயபாரதம்

ஓய்வுபெற்ற முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி மார்கண்டேய கட்ஜூ, எதையாவது சொல்லிவிட்டு பிறகு சர்ச்சையில் சிக்கிக்கொள்வதில் புகழ் பெற்றவர். அந்த வகையில் தற்போது, முஸ்லிம்களின் மத கோஷமான ‘அல்லா ஹு அக்பர்’ என்பதை கேலி செய்யும் விதமாக, கடந்த புதன்கிழமை அன்று “ஹனுமான்ஜி யூ அக்பர்” என்று முகநூலில் பதிவிட்டார். இது முஸ்லிம்களிடையே கடும் கோபத்தை தூண்டியது. சமூக ஊடகங்களில் அவரின் இந்த பதிவுக்கு பலரும் கடுமையான வார்த்தைகளால் தாக்கியுள்ளனர். இதனால், தனது அந்த முகநூல் பதிவை அவர் நீக்கிவிட்டார். முன்னதாக, தன்னை ஒரு நாத்திகர் என கூறிக்கொண்டவர் கட்ஜூ என்பது குறிப்பிடத்தக்கது.

# சி.பி.ஐ விசாரணையில் முன்னாள் முதல்வர்

கடந்த 2012ல் கேரள முதல்வராக காங்கிரசை சேர்ந்த உம்மன் சாண்டி பதவி வகித்தார். அப்போது அவர் மீது, சோலார் பேனல் எனப்படும் சூரிய மின் தகடுகள் பொருத்துவதில் ஊழல் நடந்ததாக குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. உம்மன் சாண்டி உள்ளிட்டோர் தன்னிடம் பாலியல் ரீதியில் அத்துமீறி நடந்ததாக, இவ்வழக்கின் முக்கிய குற்றவாளி 2013ல் காவல்துறையில் ஒரு புகார் அளித்தார். இப்புகார் தொடர்பாக ஆறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. எனினும் கேரள காவல்துறை இதனை மெத்தனமாக விசாரிப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து சி.பி.ஐ., விசாரணைக்கு முதல்வர் பினராயி விஜயன் பரிந்துரைத்திருந்தார். இதன்படி இந்த வழக்குகளை சி.பி.ஐ ஏற்றுக்கொண்டு விசாரணையை துவக்கியுள்ளது.



விஜயபாரதம்

# ராகுல் கணக்கு மீண்டும் முடக்கப்படுமா?



டெல்லி சிறுமி பாலியல் கொலை வழக்கில், அந்த குடும்பத்தினரின் சம்மதத்தின் பேரிலேயே தான் புகைப்படத்தை வெளியிட்டதாக ராகுல் கூறினார். ஆனால், ராகுலின் கூற்றை ‘பொய்’ என திட்டவட்டமாக அக்குடும்பத்தினர் மறுத்துவிட்டனர். பா.ஜ.க தேசியத் தலைவர் ஜெ.பி. நட்டா, இது குறித்து கூறுகையில், முதலில் ராகுல் காந்தி இந்த பிரச்சினையை அரசியலாக்கினார், பின்னர் பெற்றோரின் படத்தைப் பகிர்ந்து பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை வெளிப்படுத்தினார். சட்டம் அதைப் பற்றி கேட்டபோது, அவர் அனைவரிடமும் பொய் சொல்கிறார்’ என கூறினார். ‘ராகுலின் இந்த பொய் காரணமாக அவரது டுவிட்டர் உள்ளிட்ட சமூக ஊடகக் கணக்குகளை மீண்டும் முடக்க வேண்டும்’ என பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் சம்பித் பத்ரா கோரியுள்ளார்.

# குழப்பத்தில் லெபனான்



விஜயபாரதம்

கடந்த 2 வருடங்களாக பெரும் நிதி சிக்கலை சந்தித்து வருகிறது லெபனான். அந்நாட்டின் வெளிநாட்டு நாணய கையிருப்பு 14 பில்லியனாகக் குறைந்து விட்டது. இதனால் எரிபொருள் இறக்குமதிக்கான அனைத்து மானியங்களும் நிறுத்தப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது அந்நாட்டில் ஏற்கனவே நிலவி வந்த எரிபொருள் நெருக்கடியை மேலும் மோசமாக்கியது. இதனால், தற்போது அங்கு பெரும்பாலான எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. மருத்துவமனை, நீர் ஏற்றம் உள்ளிட்ட அத்தியாவசிய பணிகளுக்குகூட எரிபொருள், மின்சாரம் கிடைக்கவில்லை. வீடுகளுக்கு ஒரு நாளுக்கு 4 மணி நேரம் மட்டுமே மின்சாரம் கிடைக்கிறது. இதனால் எரிபொருள் கடத்தல், பதுக்கல், துப்பாக்கிசூடு, அரசு அலுவலகங்கள் சூறையாடல் என 1975 முதல் 1990வரை நடந்த உள்நாட்டுப் போரின்போதான நிலையைவிட மோசமான சூழலை லெபனான் சந்தித்து வருகிறது. அந்நாட்டின் நாணய மதிப்பு 90 சதவீதம் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

# ஆப்கனுக்கு அங்கீகாரமா?

அமெரிக்கா, இங்கிலாந்து, பாரதம் உள்ளிட்ட 12 நாடுகள் துப்பாக்கி முனையில் அமையும் ஆப்கானிஸ்தான் அரசை அங்கீகரிப்பதில்லை என ஏற்கனவே முடிவு செய்துள்ளன . அந்த வரிசையில் தற்போது கனடாவும் இணைந்துள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, 20 ஆண்டுகளுக்கு முன்பு, தலிபான்கள் அந்த நாட்டை கைப்பற்றியபோது கனடா அதனை அங்கீகரிக்கவில்லை. அதேபோல தற்போதையை அரசையும் அங்கீகரிக்கும் எண்ணம் இல்லை என கூறியுள்ளார். ஆனால், தங்கள் சுயநலத்தை முன்னிட்டு ஜனநாயகத்தை மீறி, அப்பாவிகளைக் கொன்று ஆட்சி அமைத்துள்ள தலிபான்களின் அரசாங்கத்தை பாகிஸ்தான், ரஷ்யா, துருக்கி, சீனா போன்ற வேறு சில நாடுகள் அங்கீகரித்துள்ளன என்பது வருத்தத்திற்கு உரியது.





# தீரர் சத்தியமூர்த்தி



விஜயபாரதம்

புதுக்கோட்டையில் உள்ள திருமயத்தில் பிறந்த தீரர் சத்திமூர்த்தி, சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றவர். காங்கிரஸ் கொள்கைகளில் ஈடுபாடுகொண்டு தமிழக காங்கிரசில் சேர்ந்தார். காங்கிரசின் பிரதிநிதியாக மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்த்திருத்தம், ரவுலட் சட்டத்திற்கு எதிரான இணை நாடாளுமன்றக் குழுவில் வாதாட இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

1937ல் நடைபெற்ற சென்னை சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு, சென்னை மாகாண கவுன்சிலரானார். 1939ல் சென்னையின் கடும் தண்ணீர் பஞ்சத்தை போக்க, ஆங்கிலேய அரசுடன் போராடி பூண்டி நீர்த்தேக்கம் அமைய காரணமானார். அது இன்றளவும் மக்களின் தாகம் தணிக்கிறது.

தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சராக இருந்த காமராஜருக்கு அரசியல் வழிகாட்டியாக திகழ்ந்தவர் தீரர் சத்திய மூர்த்தி. 1936ல் காங்கிரஸ் கமிட்டி தலைவராக தேர்தெடுக்கப்பட்ட சத்தியமூர்த்தி, காமராஜரை பொது செயலாளராக நியமித்தார். தான் கைபிடித்து அழைத்துக் கட்சியில் சேர்த்த காமராஜரை தலைவராக்கி அழகுபார்த்தார். காமராஜரின் தலைமையின்கீழ் செயலாளராகப் பணியாற்றிய பெருந்தன்மை, இன்றைய அரசியல்வாதிகளுக்கும் இளைஞர்களுக்கும் முன்னுதாரணம்.

நாட்டுக்காக மட்டுமல்லாமல் பாரதி பாட்டுக்காகவும் அவர் போராடினார். பர்மா அரசு, பாரதி பாடல்களைத் தடைசெய்தது. பாடல் நூல்களை பறிமுதல் செய்தது. அதைக் காரணம் காட்டி அன்றைய "சென்னை ராஜதானி" பாரதி பாடல்களைத் தடைசெய்தது. அதை எதிர்த்து முழங்கிய தீரர் சத்தியமூர்த்தி, "நீங்கள் தாராளமாக எங்கள் பாரதியின் பாடல்களைத் தடைசெய்து கொள்ளலாம், பாரதியின் பாடல் நூல்களையும் பறிமுதல் செய்து எரிக்கவும் செய்யலாம். எங்களுக்கு ஆட்சேபணை இல்லை" என்று தன் பேச்சைத் தொடங்கினார்.

அனைவரும் அதிர்ந்தனர். தொடர்ந்து பேசிய சத்தியமூர்த்தி, "ஆனால் அது வெட்டி வேலை. ஏனெனில், பாரதி பாடல்கள் அனைத்தும் எங்கள் தேசபக்தி மிக்க தமிழர்களுக்கு மனப்பாடம். நாங்கள் ஊர்ஊராகப் பாரதியைப் பாடிக்கொண்டு ஊர்வலம் போவோம். மனப்பாட சக்தியைப் பறிமுதல் செய்யும் புதிய எந்திரம் எதையும் நீங்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்பதால், உங்களால் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது. அதனால் நீங்கள் பாடல்களைத் தாராளமாகத் தடைசெய்யலாம். ஆனால் அது வீண் வேலை" என்று முழங்கினார். பின்னர் பாரதி பாடல்களைத் தடைசெய்யும் முயற்சியை அன்றைய சென்னை மாகாண அரசு கைவிட்டது.

# ஆப்கனில் பெண்கள் போராட்டம்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தான் முழுவதையும் தலிபான்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர். அதிபர் அஷ்ரப் கானி பதவியை ராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறி விட்டார். அண்டை நாடுகளிடம் தஞ்சம், தலிபான்களிடமே தஞ்சம் என அந்நாட்டு ராணுவ வீரர்களும் ஓடி விட்டனர். மக்கள் சாரிசாரியாக நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அரசு ஊழியர்களுக்கு பொது மன்னிப்பு என கூறும் தலிபான்கள், காபூலில் உள்ள வீடுகளில் சோதனை நடத்துகின்றனர். இந்நிலையில், யாரும் எதிர்பார்க்காத வகையில், ஆப்கானிஸ்தானில் படிப்பு, அரசியல், வேலைகள் என எந்த உரிமைகளையும் பெண்களிடம் இருந்து பறிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி தலைநகர் காபூலில் 4 பெண்கள் பர்தா அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, பயங்கர ஆயுதங்களுடன் தலிபான்கள் அவர்களை சுற்றி சுற்றி வந்தனர். அவர்களின் நிலை பிறகு என்னவாகும் என்பதையும் தாண்டி அவர்கள் முன்னெடுத்த இந்த போராட்டம் உலக நாடுகளையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

www.vijayabharatham.org

என்ற இணையதளம் அல்லது

044 - 26420870 என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006



# ஸ்மைல் பிளீஸ்

இன்று உலக புகைப்பட தினம். ஆயிரம் வார்த்தைகள் சொல்வதை ஒரு புகைப்படம் உணர்த்தி விடும். மக்களிடம் எளிதில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் புகைப்படத்துக்கு உண்டு. ஒரு நல்ல புகைப்படத்திற்காக மணிக்கணக்கில் ஏன் நாள் கணக்கில் கூட காத்திருக்கின்றனர் புகைப்படக் கலைஞர்கள். புகைப்படம் எடுப்பது என்பது ஒரு தனிக்கலை. ஒரு புகைப்படம் ஆயிரம் வார்த்தைகளுக்கும் சமம். ஒரு சந்ததியினரின் வாழ்க்கை முறையை, வரலாற்றை அடுத்தத் தலைமுறையினர் அறிந்து கொள்ள புகைப்படங்கள் ஒரு முக்கிய ஆவணம்.

கேமரா அப்ஸ்குரா என்ற கருவி மூலம் 13ம் நூற்றாண்டில் தனது பயணத்தை தொடங்கிய புகைப்படக்கலை, தற்போது பல பரிமாணங்களையும் கடந்து நிற்கிறது. டிஜிட்டல் கேமிரா, ஸ்மார்ட்போன் போன்றவற்றை பயன்படுத்தி யார் வேண்டுமெனாலும் தற்போது எளிதாக புகைப்படத்தை எடுக்கலாம்.

1839ல் சர் ஜான் ஹெர்செல் என்பவர் கண்ணாடியை பயன்படுத்தி நெகட்டிவ்களை எடுக்கும் முறையை கண்டுபிடித்தார். அவர்தான், போட்டோகிராபி என்று இதற்கு பெயர் வைத்தார். போட்டோகிராபி என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்த சொல். ஒளியின் எழுத்து என்பது அதன் பொருள். அதே ஆண்டு, லூயிஸ் டாகுரே, சில்வர் காப்பர் பிளேட்டில் பிம்பங்கள் விழும் வகையிலான புகைப்படம் எடுக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். 1888ல் ஜார்ஜ் ஈஸ்ட்மேன், பேப்பர் பிலிம்களை பயன்படுத்தி பாக்ஸ் கேமராவில் புகைப்படம் எடுக்கும் முறையை கண்டறிந்தார்.

1900ல் பாக்ஸ் பிரவுனி என்ற வகை கேமராக்களை கோடாக் அறிமுகப்படுத்தினார். 35 மி.மீ ஸ்டில் கேமராக்களை 1913ல் ஆஸ்கர் பர்னாக் வடிவ மைத்தார். இது புகைப்படத் துறையையே புரட்டிப்போட்டது. முதல் டிஜிட்டல் கேமராவை சோனி நிறுவனம் 1981ல் தயாரித்தது. அதன் பின்பு, டிஜிட்டல் கேமராக்களில் தற்போது வரை பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

முன்பெல்லாம் புகைப்படம் எடுப்பது மிகவும் அரிது. ஆனால், தற்போது தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் புகைப்படம் எடுப்பது எளிதாகி விட்டது. குழந்தைகள்கூட அழகாக புகைப்படம் எடுக்கின்றன. ஒரு காலத்தில் கேமராக்களில் மற்றவர்கள் நம்மை புகைப்படம் எடுத்தது போய் இப்போது செல்ஃபி எடுப்பது அதிகரித்துள்ளது. என்னதான் செல்போனில் செல்ஃபி எடுத்தாலும் கறுப்பு வெள்ளையில் அட்டென்சன் போஸ் கொடுத்து எடுத்த புகைப்படங்களை யாராலும் மறக்க முடியாது.

ஜி.எம். சீனு